செய்தி வெளியீடு
செ.வெ.எண்.26 நாள்:17.02.2020

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (17.02.2020) நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 258 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார்

******

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (17.02.2020) மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆப.,அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடும்ப அட்டை, வீட்டுமனைப்பட்டா, தொழில் மற்றும் கல்விக் கடன் உதவி, முதியோர் உதவித்தொகை, சாலை, குடிநீர், கழிப்பிடம் மற்றும் மின்சார வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 258 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது.

பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்களிடம் அளித்த இம்மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் பரிசீலனை செய்து தகுதி இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார். அதோடு மட்டுமல்லாமல் கடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தீர்வு காணாமல் நிலுவையிலுள்ள மனுக்களின் மீது விரைவான நடவடிக்கை எடுக்குமாறு துறை ரீதியான அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்.

இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்,சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதகை, குன்னூர் பகுதியை சேர்ந்த 54 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை பெறுவதற்கான காசோலையினையும், மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியிலிருந்து உதகையை சேர்ந்த மாற்றுத்திறனாளி செந்தில்குமார் என்பவருக்கு மடிக்கணினி வாங்குவதற்காக ரூ.28,500/-த்திற்கான காசோலையினையும், குன்னூர் சோகத்தொரை பகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளி சக்திவேல் என்பவருக்கு பெட்டிக்கடை வைப்பதற்காக ரூ.25,000/-த்திற்கான காசோலையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களையும், மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு கடனுதவிகளையும், சவுதி அரேபியாவில் காலமான கூடலூர் வட்டம் சின்னதூண்டியை சேர்ந்த ராஜ்குமார் என்பவரின் சம்பள பாக்கி தொகை ரூ.3,68,649/-த்திற்கான காசோலையினை அவரது தகப்பனார் பரசுராமன் ஆறுமுகம் என்பவரிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.நிர்மலா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.கண்ணன், உதவி ஆணையர் (கலால்) திரு.பாபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கணேஷ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.முகம்மது குதுரதுல்லா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,நீலகிரி மாவட்டம்.